[illegible] 1924-25

സംപുടം 1- ലക്കം 5


3L
R65ന്ദ211, N11VD
N25·15·5
156X18

Regd. No. M. 916.

# THE VEDANTA DIPIKA

# வேதாந்த தீபிகை.

ரக்தாக்ஷி௵,
1924—1925.
ஸம்புடம் 15.

மாசி௴.
FEBRUARY.
ஸஞ்சிகை 5.



பத்ராதிபர். }
காரியதர்சி. }
ஏ. ஸ்ரீநிவாஸராகவ
அய்யங்கார், எம்.ஏ.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7- APR 1925
MADRAS

விஷய ஸூசிகை.

1. தேவாலய பரிஷ்காரம்:— 105
2. சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை,
(பதினொன்றாவது வார்ஷிக மஹாஸங்கம்):—உதவிகார்யதர்சி 112
3. சில சர்ச்சைகள்:-ஸ்ரீ உ.ப. வே. ராஜகோபாலாசார்யர் B.A. B.L, 124
4. கடிதம்:—வழூர். ஸ்ரீ. உ.ப. வெங்கட சேஷாசார்யர். 127
5. புஸ்தக விமர்சம்:— 127
6. ஸ்ரீபரமபத ஸோபாநம், (வ்யாக்யானத்துடன்):—
ஸ்ரீ. உ.ப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 1
7. ஸ்ரீ ஸச்சரித்ர ரக்ஷை (தமிழ்மொழி பெயர்ப்புடன்):—
ஸ்ரீ. உ.ப. வே. பண்டிதபூஷணம் சே. நரஸிம்மாசார்யர். 105

Office:—2/11. Adiappa Mudaly Street, Purasawalkam,
K. R. Press, Madras.

வருஷச் சந்தா ரூ. 3—0—0.] [ஸஞ்சிகை 1-க்கு அணா 4.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - APR 1925
MADRAS

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர் } ஆர். ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், எம். ஏ.
கார்யதர்சி }

ஸம்புடம் 15.] ரக்தாக்ஷி ஹு, மாசிமீ. [ஸஞ்சிகை 5.

" த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌர வராம்பரம் ததாநே,
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா॥"

ஸ்ரீபாகவதம். 1-9-23.

ஸ்ரீ:

## தேவாலய பரிஷ்காரம்.

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் இவ்வுலகத்தில் தன்னுடைய ஆத்மா நல்லகதி அடையும்படி தகுந்த ஏற்பாடுகளைச் செய்துகொள்வது அவனுடைய முக்யமான கடமையாகும். எவ்விதமான ஸத்கர்மங்களைச் செய்தாலும் அவை இவனுக்குப் புண்யலோகங்களை அடையும்படிசெய்து அந்தப் புண்யபலானுபவமானவுடன் மறுபடி இந்த லோகத்தில் ஜன்மத்தை எடுக்கும்படி செய்கின்றன. மறுபடி பிறப்பில்லாத நல்லகதி என்பது மோக்ஷமே. அம்மோக்ஷத்தை அடைவதற்குத் தகுந்த ப்ரயத்னம் நாம் செய்யவேண்டியது அவச்யம். அந்த ப்ரயத்னம் பக்தி அல்லது ப்ரபத்தி என்று இருவகைப்படும். இவ்விருவகை உபாயங்களன்றி வேறு எவ்விதமாகவாவது அந்த மோக்ஷத்தை அடையமுடியாது என்று ஸ்ரீகீதாசார்யன் தானே அருளிச்செய்திருக்கிறார். இதில் பக்தியாவது இந்தக் காலத்து மனுஷ்யர்களுக்கு ஸாத்யமானதல்ல. மனதை அடக்கி இந்த்ரியஜயம் செய்ய முடியாத சரீரஸ்திதியை உடைய மனுஷ்யர்களுக்கு இது அனுஷ்டிக்க முடியாத கார்யம். ஸ்ரீமந்நாதமுனிகள் காலத்துடன் பக்தியோகமென்பது நின்றுவிட்டது. க்ஷீணதசையை அடைந்திருக்கும் நம்முடைய ஸ்திதியைப் பார்த்து நம்பூர்வாசார்யர்கள் ஸ்ரீகீதாசார்யனால் உபதேசிக்கப்பட்ட ப்ரபத்



186748

யுபாயத்தைத் தாமும் அனுஷ்டித்துப் பிறருக்கும் உபதேசித்து அவர்களுக்கு அனுஷ்டானம் பண்ணிவைத்து அவர்களை நல்லகதியை அடையும்படிசெய்து வருகிறார்கள். இந்த ப்ரபத்தியாவது நம்மைக் காப்பாற்றும் பொறுப்பைப் பகவானிடம் வைத்துவிடுதல். நம்முடைய பரத்தை வைக்க இடம் ஒன்று அவச்யமல்லவா? கரணகளேபரத்துடன் கூடின நாம் பரமபதத்தில் பகவானை நாடிப் பரத்தை ஸமர்ப்பிக்க முடியாததாகையால் இவ்வுலகத்திலேயே வைப்பதற்குத் தகுதியான இடமில்லாமல் தன் பக்தர்கள் தவிப்பார்களே என்று எண்ணி, பரமகாருணிகனான பகவான் அர்ச்சாரூபியாய் இந்த உலகத்தில் எழுந்தருளி நம்மைக் காப்பாற்றிவருகிறார். ஆகையால்தான் தென் இந்தியாவில் பல இடங்களில் ஜனங்களுடைய ஸௌகர்யத்தை உத்தேசித்து நம்பூர்வகாலத்து ராஜாக்கள் பல ஸந்நிதிகளைக்கட்டி ப்ரதிஷ்டை செய்வித்தார்கள்.

ஸந்நிதிகளில் எழுந்தருளியிருக்கும் விக்ரஹங்கள் வெறும் உருவங்களல்ல. ஸாக்ஷாத் அப்ராக்ருத திவ்ய திருமேனியையுடைய பகவான் தான் நம்மால் செய்துவைக்கப்பட்ட விக்ரஹத்தில் ப்ரவேசித்து ஸாந்நித்யம் செய்கிறார் என்று ஸ்ரீஸாத்வதஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. பிம்பங்களைச் செய்து மந்த்ரபூர்வகமாக யந்த்ரங்களின்பேரில் ஸ்தாபித்து ப்ராணப்ரதிஷ்டைசெய்தால், பகவான் அந்தப் பிம்பத்தில் தன்னுடைய அப்ராக்ருத திவ்ய திருமேனியுடன் வந்து வஸிக்கிறார். ஒவ்வொரு பகவத் ஸந்நிதிகளில் மூலபேரத்தில் ஸர்வசக்தியும் இருக்கிறதென்றும், அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்தைப் பார்க்கிறவர்களுக்கு மஹாபாதகங்கள் கூட நசித்துவிடுகின்றனவென்றும், அதனால் ப்ரதிதினம் திவ்யமங்கள விக்ரஹ தரிசனம் செய்து வருவது உத்தமம் என்றும் பெரியோர்களுடைய அபிப்ராயமும் அனுஷ்டானமும் இருந்துவருகின்றன.

மனுஷ்யனுக்கு ஸஹஜசத்ருவான ஆலஸ்யம் என்பது வெகுகாலமாகக் கூடவே இருந்து இவனை ஆக்ரமிக்கப் ப்ரதிக்ஷணமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அதற்கு இடம் கொடாமல் ஜாக்ருகனாக இருக்கிறவன் புத்திமான். இடம் கொடுத்துவிட்டால் தப்புவது கஷ்டம். இந்தச் சோம்பலால் ஸந்நிதிக்குப்போய்த் திவ்யமங்களவிக்ரஹத்தின் தர்சனம் செய்யாதபேர்களும் உஜ்ஜீவிக்க வேண்டுமென்பதற்காகவே உத்ஸவங்கள் என்ற வியாஜத்தை வைத்துப் பெருமாளை வீதியில் எழுந்தருளப்பண்ணி அந்த ஸமயத்திலாவது திவ்யமங்கள விக்ரஹத்தைத் தர்சித்தால் அவர்களுக்கு ஸத்வோன்மேஷம் உண்டாகி அவர்களும் உஜ்ஜீவிக்கக்கூடும் என்று, மூலபேரத்திலிருந்து உத்ஸவருக்கு சக்தியை ஆகர்ஷித்துப் பிறகு எழுந்தருளப்பண்ணுவது வழக்கம். ஆகையால்தான் உத்ஸவகாலங்களில் பெருமாள் வெளியே



எழுந்தருளப்பண்ணிக் கொண்டிருக்கும் காலத்தில் மூலபேரத்தை ஸேவிப்பது அபசாரமென்று சாஸ்த்ரம் தெரிவிக்கிறது. ஆகையால் பெரியோர்கள் அந்தக் காலங்களில் மூலபேரத்தை ஸேவிக்கிறதில்லை.

இப்படி மந்த்ரபலத்தால் ப்ரதிஷ்டை பண்ணப்பட்டு ஸாந்நித்யமுள்ள திவ்யமங்களவிக்ரஹத்தின் திருவடிகளிலன்றோ நம்முடைய பரத்தை ஸமர்ப்பிக்கவேண்டும். இந்த ஸாந்நித்யம் மந்த்ரபூர்வகமாக ப்ரதிஷ்டை பண்ணினதால் மாத்ரம் நிற்காது ஆனால்,

அர்ச்சகஸ்ய தபோயோகாத் அர்ச்சநஸ்யாதிசாயநாத் ।
ஆபிரூப்யாச்ச பிம்பாநாம் தேவஸாந்நித்யம் ருச்சதி ॥

(அர்ச்சகர்களுடைய தபோவிசேஷமும், அதாவது அனுஷ்டான பூர்த்தியும், ஆராதனத்தினுடைய சிறப்பும், விக்ரஹங்களின் அழகும் எம்பெருமானுடைய ஸாந்நித்யத்துக்குக் காரணங்கள்) என்று நிர்ணயஸிந்து முதலிய க்ரந்தங்களில் உதாஹரிக்கப்பட்ட வசனத்திலிருந்து வ்யக்தமாக ஏற்படுகிறது. இம்மூன்று லக்ஷணங்களும் சில ஸ்வல்பமான திவ்ய க்ஷேத்ரங்களில் மாத்திரம் அமைந்திருக்கின்றன. இந்த மூன்று காரணங்களில் மூன்றாவது சில்பியின் ஸாமர்த்தியத்தால் கிடைத்துவிடலாம். அதைக் கொண்டு ஒருஸந்நிதியில் ஒரு பிம்பத்தை ப்ரதிஷ்டை பண்ணிவைத்துவிட்டால் மற்ற இரண்டு அம்சங்கள் சரியாக இருந்தாலன்றி ஸாந்நித்யம் நிலைக்காது. இதில் இரண்டாவது காரணமும் முதல் காரணத்தைப்பொருத்ததாகவிருக்கிறது. அர்ச்சகர்கள் மிகவும் தபஸ்ஸுடன் அதாவது ஆசாரம் நெறியுடன் கூட இருந்தாலல்லவோ அவர்கள் ஆராதனத்தை சரியாக நடத்திவருவார்கள். ஆகையால் அர்ச்சகர்களுடைய ஸ்வரூபத்தில் ஸகலமும் தங்கியிருக்கிறது. திவ்யமங்கள விக்ரஹத்தைப் பார்த்தமாத்ரத்தால் மஹாபாதகம் போய்விடும் என்றால் அதை ஸ்பர்சித்தவர்களுக்கு எவ்வளவு பாரிசுத்யம் ஏற்படும். ஸ்ரீராமன் சிறியதிருவடியைக் கட்டிக்கொண்டபொழுது 'ஏஷ ஸர்வஸ்வ பூதஸ்து' என்று சொன்னார் அல்லவா. தனக்கு மிகவும் ப்ரியமான திவ்யதிருமேனியின் பெருமையையும் அதன் பரிசுத்தமான தன்மையையும் எவ்வளவு என்று எவரால் சொல்லிமுடியும்.

திவ்யமங்கள விக்ரஹங்களுக்கு ஸாந்நித்யமிருந்ததால் சத்ருபூயிஷ்டமான முன்காலத்தில் பௌத்தர்கள் ஜைனர்கள், துலுக்கர்கள், பாஷண்டிகள், பதிதர்கள், கொள்ளைக்காரர்கள், அத்வைதிகள் முதலானவர்களுடைய உபத்ரவம் அதிகமாக இருந்தகாலத்தில் திவ்யமங்கள விக்ரஹங்களைப் பாதுகாத்துக்காப்பாற்றி நமக்குக்கொடுத்தது நம்பூர்வாசார்யர்கள். இந்தத் திவ்யமங்கள விக்

ரஹங்களின் பெருமையை ஸஹிக்காமல் வெகுகாலத்துக்குமுன் ஸ்ரீரங்கநாதனுடைய சக்தியை எடுத்துவிடும் பொருட்டு ஒருவருக்கும் கண்ணுக்குத் தெரியாமலிருக்கும்படி தன்கண்ணில் அஞ்ஜனம் அதாவது மையை இட்டுக்கொண்டு மந்த்ரோச்சாடனம் செய்து ஒரு புரச்சமய மந்த்ரவாதி பெரிய பெருமாளுடைய சக்தியை ஆகர்ஷித்து வந்தான். ப்ரதிதினம் ஸேவிக்கப்போகும் கூரநாராயணஜீயர் என்பவர் பெருமாள் திருமேனிவாடி இருப்பதைக் கண்டு இதில் ஏதோவிசேஷமிருக்கிறதென்று கோவிலதிகாரிகளை விசாரிக்குமளவில் அவர்கள் தங்களுக்கு யாதொன்றும் தெரியாதென்று சொன்னார்கள். பின்னும் சிலநாள் ஆனபிறகு பெருமாளுடைய தேஜஸ் வரவர இன்னும் மழுங்க ஆரம்பித்தவுடன், கோவிலதிகாரிகளை கவனிக்கும்படி சொல்ல அவர்களும் அப்படியே ஜாகரூகர்களாகக் கவனிக்கும்போது பலிபீடத்தில் பலிப்ரஸாதம் காணாமல் போவதைக்கண்டு ஜீயரிடம் சொன்னார்கள். உடனே இதுவிஷயம் என்னவென்று ஊஹித்து ஜீயர் மிளகை நிரம்ப அரைத்து ப்ரஸாதத்துடன் கலந்து வைத்து விடும்படி நியமிக்க, பரிசாரகரும் அப்படியே செய்ய, அதை எடுத்துச் சாப்பிட்ட மந்த்ரவாதி இந்த ப்ரஸாதத்தை ஸாப்பிட்டவுடன் காரம் பொறுக்காமல் அவன்கண்களிலிருந்து நீர்தாரை தாரையாய்ப்பெருக அவனிட்டிருந்த அஞ்ஜனம் கரைந்து போய்விட்டது. உடனே எல்லோருடைய கண்களுக்கும் அவன் புலப்பட்டான். உடனே அவனைப்பிடித்துவிட்டதால் அவனுத்தேசித்தகார்யம் நிறைவேறவில்லை. இப்படிப்பெருமானை நம் பூர்வர்கள் காப்பாற்றினார்கள். மேலும் துலுக்கர்களுடையவும் கொள்ளைக்காரர்களுடையவும் உபத்திரவத்தால் பெரிய பெருமானை உபயநாச்சிமார்களுடன் ஸ்ரீரங்கத்திலிருந்து திருமாலிருஞ் சோலைக்கு எழுந்தருளப்பண்ணி, பிறகு அநேக தேசங்களில் சுற்றிக் கடைசியில் திருப்பதியிலும் அதன் பிறகு செஞ்ஜி என்னும் ஊரிலும் எழுந்தருளப்பண்ணி, பின்பு ஸ்ரீதேசிகன் செய்த அபீதிஸ்தவத்தால் ப்ரீதரான பெரிய பெருமாள் கோபணார்யருக்கு ஸ்வப்நம் ஸாதித்து செஞ்சியிலிருந்து ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளப் பண்ணபட்டாரென்றும், இதுபோலவே பேரருளாளப்பெருமாள் காஞ்சிபுரத்திலிருந்து உடையார்பாளையம் காட்டுக்கு எழுந்தருளப் பண்ணப்பட்டு அப்பொழுது ஜமீன்தார் அந்தப்பெருமாளைத் தன் அரண்மனையில் ப்ரதிஷ்டை பண்ணிவைத்து, வெகுகாலம் கழித்துத் தொடரமல் என்னும் ஸேனாதிபதியின் உதவியால் காஞ்சிபுரத்தில் மறுபடி ப்ரதிஷ்டைசெய்து வைக்கப்பட்டார் என்றும் ப்ராயசஃ அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். திருவஹீந்த்ரபுரத்துக்கு மேற்கே சில ஜைனர்கள் கோவில் கட்டிக்கொண்டிருந்ததாகவும் அவர்கள் ஸ்ரீதேவநாதனுடைய சக்தியை ஆகர்ஷிக்க ஆரம்பித்ததாகவும், அதைத் தடுப்பதற்காக இரண்டு யோகநரஸிம்ஹ மூர்த்திகளை நிர்மாணம்செய்து உள்ப்ராகாரத்தில் கீழண்டைப்பக்கம் இரு மூலைகளிலும் மேற்கு முகமாக ப்ரதிஷ்டை செய்து



ஜைனர்களுடைய மந்த்ரத்தைக் கிட்டவராமல் தடுத்து ஸ்ரீதேவநாதனுடைய சக்தியைக் காப்பாற்றினார்கள் என்றும் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். இன்றைக்கும் அந்த இரண்டுயோக ந்ருஸிம்ஹ மூர்த்திகளை யாரும் குறிப்பிட்ட ஸ்தலத்தில் பார்க்கலாம். இப்படிப்பட்ட உபரோதமுள்ளநாளில் அர்ச்சகர்கள் மஹாதபஸ்விகளாக இருந்தபடியால் பெருமாள் அர்ச்சகமுகேந பேசினது நமது குருபரம்பரையிலிருந்து வ்யக்தமாக ஏற்படுகிறது. ஸ்ரீபாஷ்யகாரருடன் பெரியபெருமாளும் ஸ்ரீ பேரருளாளப் பெருமாளும் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனுடன் பெரியபெருமாளும் அர்ச்சகமுகேந பேசினது ஸுப்ரஸித்தம்.

இவ்வளவு உபரோதமுள்ள காலத்தில் அர்ச்சகர்களுடைய நெறிதவறாத நடத்தையாலும் ஆசாரத்தாலும் நம்பூர்வாசார்யர்களுடைய ஆஸ்திக்யத்தாலும் ச்ரத்தையாலும் நமக்கு இம்மஹாதனங்கள் காப்பாற்றிக் கொடுக்கப்பட்டிருந்தும், கலஹங்களில்லாமல் ஸௌக்யமாய் அவரவர்கள் தங்களுடைய மதாபிப்ராயப்படி பூஜை புரஸ்காரங்கள் செய்துகொள்ளக்கூடிய இந்நாளில் அர்ச்சகர்களுடைய தபஸ்ஸும் ஆராதனமும் சரிபாகவிருந்தால் ஸந்நிதிகளில் ஸாந்நித்யம் எவ்வளவு இருக்கவேண்டும்? திவ்யமங்கள விக்ரஹத்தைப் பார்த்தமாத்ரத்தால் மஹாபாதகங்கள் போய்விடுமாகில் அந்தத் திவ்யதிருமேனியை ஸ்பர்சித்தவர்கள் எவ்வளவு பரிசுத்தர்களாக இருக்கவேண்டும்? ஒவ்வொரு வைதிக கார்யங்களைச் செய்யும்பொழுது அநேக அபசாரங்கள் ஸம்பவிக்கின்றன. அதற்கு ஒவ்வொரு க்ரியையிலும் மந்த்ர, நியம, த்ரவ்ய, முதலிய லோபங்கள் நேருவதற்கு ப்ராயச்சித்தம் செய்துகொள்ளுகிறோம். திவ்யதிருமேனியை ஸ்பர்சித்தல் முதலிய கார்யங்களில் பல அபசாரம் நேரக்கூடியது ஸஹஜமானதையால் அவைகளுக்கு க்ஷமாபணம் பண்ணிக்கொண்டு, சுத்தனும், நெறியுள்ளவனாகவுமிருந்தால் ஒழிய அவனுக்குப் பகவானுடைய நிக்ரஹம் நேரிடும். இதிலிருந்து தினப்படி ஆராதனம் செய்யும் அர்ச்சகர்கள் எவ்வளவு நெறியுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று நாம் கவனிக்கவேண்டும். ப்ரக்ருதமிருக்கும் அர்ச்சகர்களின் ஸ்திதியைக் கவனித்தால் அது எவ்வளவு தாழ்வை அடைந்திருக்கிறது பாருங்கள். ஒரு ப்ராஹ்மணன் படிப்பில்லாத தரித்ரனாக இருந்தானேயாகில் அவனைக் கோவிலில் மணி அடிக்கும் உத்யோகத்துக்குப் போகும்படி ஏற்பாடுசெய்துவருவதைப்பார்க்கிறோம். அப்படி வேலையை ஒப்புக்கொள்ளுகிறவன் தனக்குபாரம் (Responsibility) எவ்வளவு என்பதை அவனறிந்தவனல்லன். ஸந்நிதிகளில் ஆராதனத்துக்கு அர்ச்சகர்கள் தகுந்தபடி கிடைக்காததால் பாஞ்சராத்ர ரீதியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸந்நிதிகளில் வைகானஸர்களைக் கொண்டும், வைகானஸ ரீதியில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸந்நிதியில்

பாஞ்சராத்ர அர்ச்சகர்களை நியமித்து ஆராதனம் செய்துவருகிறார்கள். பாஞ்சராத்ரத்தில் நான்கு ஸித்தாந்தங்களுண்டு. அவைகளில் ஒருவித ஸித்தாந்த ப்ரதிஷ்டையில் மற்றொரு ஸித்தாந்தத்தின் ஸாங்கர்யம் கூடாது என்று சாஸ்த்ரம். இப்படியிருக்க பாஞ்சராத்ர வைகானஸ ஸாங்கர்யத்தைப்பற்றிச் சொல்லவும் வேணுமா. இவ்விதமான ஆராதகர்களால் ஆராதனம் செய்யப்பட்ட பிம்பத்தில் எப்படி ஸாந்நித்யமிருக்கும். இதை எதிர்பார்த்துத்தான் 'கலௌ பஞ்ச ஸஹஸ்ராணி விஷ்ணுஸ்த்யக்ஷ்யதி மேதிநீம்' ॥ (கலியுகம் ஆரம்பித்து ஐயாயிரம் வருஷங்களானதும் விஷ்ணு பூமியைவிட்டு விலகிவிடுகிறார்) என்று சொல்லப்பட்டிருக்கிறதுபோலும்.

அர்ச்சகர்கள் இவ்வளவு தாழ்ந்த ஸ்திதிக்கு வந்ததற்கு நம் தேசமே காரணம். முதலில் ஆகமங்களை ப்ரமாணமாக வெகுநாளாக ஒப்புக்கொள்ளாதிருந்தார்கள். அப்போது தேவபூஜை செய்பவர்களைத் தேவலகர்கள் என்றும், அவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும், அவர்களுடன் கொள்வினை கொடுப்பினை உதவாது என்றும் ஸ்ம்ருதிகர்த்தாக்கள் பொதுவாகச் சொல்லியிருப்பதை நம்பி நம்மைச் சேர்ந்தவர்கள் அவர்களை ஒதுக்கிவைத்துவிட்டார்கள். பிறகு ஆளவந்தார் ஆகமங்கள் ப்ராமாணங்களென்றும், அவை வேததுல்யங்களென்றும் விஷ்ணுபூஜை செய்கிறவர்களுக்குத் தேவலகத்வமில்லையென்றும் 'ஆகமப்ராமாண்யம்' என்னும் க்ரந்தத்தைச்செய்து மிகவும் ப்ரயாஸத்துடன் ஸித்தாந்தம் செய்ததின்பேரில் அர்ச்சகர்கள் பாகவதர்கள் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனாலும் ஸ்ரீஆளவந்தார் பாஞ்சராத்ர ஸம்ப்ரதாயத்தை ஒப்புக்கொண்டாரே தவிர வைகானஸ சாஸ்த்ரத்தைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் உபேக்ஷித்துவிட்டார் என்று அர்ச்சகர்களைப்பற்றின எண்ணம் முற்றிலும் மாறவில்லை. ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீஆளவந்தாருடைய கொள்கையை அநுஸரித்துப் பாஞ்சராத்ரம் ப்ரமாணமென்று நிஷ்கர்ஷித்தார். இந்தக்கொள்கைகள் ஸ்ரீசங்கராசார்யர், தமது பாஷ்யத்திலும் வாஸுதேவனுடைய நித்யத்வம், பரத்வம், அவனுடைய ஆராதனமே எல்லாக்கர்மங்களிலும் சிறந்தது என்பதில் தாம் ஆக்ஷேபிக்கவில்லையென்றும் வேதங்களுக்கு விரோதமாகயிருக்கும் அம்சங்களை தாம் ஒப்பவில்லையென்றும் வேதங்களுக்கு விரோதமில்லாத அம்சங்களை தாம் ஒப்புக்கொள்வதாயும் எழுதியிருக்கிறார். இவர்கள் எல்லோரும் பாஞ்சராத்ரத்தை எடுத்து ஸித்தாந்தம் செய்தார்களே தவிர வைகானஸ சாஸ்த்ரத்தைப்பற்றிப் பேசவில்லை. ஆகையால் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீவ்யாஸர், ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர் இவர்களுடைய அபிப்ராயத்தை அநுஸரித்து பாஞ்சராத்ர ஆகமம் ப்ரமாணம் என்று ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையில் ஸாதித்து, ந்யாய பரிசுத்தி முதலிய க்ரந்தங்களில் வைகானஸ சாஸ்த்ரமும் ப்ரமாணந்தான் என்று நிஷ்கர்ஷித்தருளினர். இதன்



பேரில் ஆகமங்கள் நம் நாட்டில் நிலைத்தன. இருந்தாலும் பழைய வாஸனை ஒட்டிக்கொண்டே இருந்து வருகிறது. இதனால் அர்ச்சகர்கள் மற்ற ஸ்ரீவைஷ்ணவர்களுடன் கலக்காமல் தனியாகவே இருந்து வருகிறார்கள். மேலும் அவர்கள் ஸங்கியை குறைவாக இருக்கிறபடியால், வேதாத்யயனம் செய்வதற்கும் அவர்களுடைய ச்ரௌத ஸ்மார்த்த ப்ரக்ரியைகளைக் கற்றுக்கொடுக்கப் பெரியோர்களும் பாடசாலைகளுமில்லை. படிப்பிருந்தால் அல்லவோ வைசிஷ்டயமிருக்கும். ஆகையால் வரவர ஸ்வரூபத்திற்கு மிகவும் லோபம் ஏற்பட்டுக்கொண்டே வருகிறது.

இந்நாளில் தேவஸ்தானங்களை சீர்திருத்தம் செய்யப் ப்ரவர்த்திக்கிறவர்கள் இந்த விஷயத்தின் வாஸ்தவ ஸ்திதி இன்னதென்றும், எந்த அம்சம் குறைவு, அதை எப்படி நிவர்த்திக்கிறது என்றும் யோசனை செய்யாமல் கேவலம் அவைகளுக்கு த்ரவ்யம் சேர்ப்பதும், வருமானங்களைக்கொண்டு உத்ஸவங்களை நடத்துவது, அதற்கு வாத்யம், ஸ்தலங்களின் அலங்காரம் முதலிய விஷயங்களில் செலவுசெய்து விமர்சையாக நடத்துவதாகவும் எண்ணங்கொண்டு ப்ரயத்னப்பட்டுவருகிறார்களே தவிர அவச்யகர்த்தவ்யமான அம்சங்களைச் சற்றேனும் கவனிப்பதில்லை. இப்பொழுது கவனிக்கவேண்டிய அம்சம் என்னவென்று விசாரிப்போம். அவையாவன:—

(1) ஆகம க்ரந்தங்கள் ஓலைச்சுவடிகளிலிருப்பதை நாளுக்குநாள் கரையானுக்கு ஆஹாரமாக்காமல் காப்பாற்றி, அவைகளைச் சேர்த்து அச்சிட்டு ப்ரகாம் செய்வது.

(2) பிறகு இவைகளை ப்ரவசனம் செய்ய ஒருபாடசாலை ஏற்படுத்துவது.

(3) இப்பாடசாலையில் அத்யயனம் செய்து உத்தீர்ணனானவர்களுக்கு ஸந்நிதியில் அர்ச்சகபதவியைக் கொடுப்பது என்பவை.

இந்த அர்ச்சகர்கள் தாங்கள் செய்யும் கார்யங்கள் இன்னவென்றும், அவைகளின் பெருமை இன்னதென்றும் தெரிந்தால் அல்லவோ அவைகளை அவர்கள் லோபமில்லாமல் பாபத்துக்குப் பயந்து பயத்துடனும் ச்ரத்தையுடனும் செய்வார்கள். இவ்வளவும் ஒருவரால் ஆகக்கூடிய கார்யமல்ல. இதில் கோவில் அதிகாரிகள் ஒன்று சேர்ந்து பொதுவில் ஒரு பாடசாலை ஏற்படுத்தி அதில் அர்ச்சகர்களை சிக்ஷித்து வெளியில் அனுப்பும்படி ஏற்பாடு செய்தால் தான் பகவத் ஸந்நிதிகளில் இவர்கள் சரியானபடி ஆராதனம் செய்து ஸாந்நித்ய மிருக்கும்படி செய்வார்கள். இதில் ஸ்ரீ வைஷ்ணவனாகப் பிறந்த ஒவ்வொருவரும் தன்னால் ஆனவரை இந்த கார்யங்களை நிறைவேற்றவேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது தன்னுடைய ஸ்வரூப தர்மம் என்று எண்ணம்கொண்டு தகுந்த முயற்சியை எடுத்துக்கொண்டால் இது பலபர்யவ[illegible]

186748

ஸ்ரீ:

# சென்னை ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையின் பதினான்காவது வார்ஷிக மஹாஸங்கம்.

நாளது ரக்தாக்ஷி ௵ மார்கழி ௴ 15, 16, 17, (டிஸம்பர் ௴ 29, 30, 31)உகளில் மதுரையில் கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உப. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அக்ராஸனத்தின் கீழ் பதினான்காவது வார்ஷிக மஹாஸங்கம் மிகவும் விமர்சையாய் நடைபெற்றது. அதன் விவரம் கீழ்க்குறிக்கப்படுகிறது.

மார்கழி ௴ 14௳ ஞாயிற்றுக்கிழமை மத்யாஹ்னம் 3-மணிக்கு மதுரை ஸ்டேஷனில் ஸ்ரீமான்கள் ஸப்ஜட்ஜி வ. பாஷ்யமய்யங்கார், T. C. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், K. ராம அய்யங்கார், திவான்பஹதூர் ராமபத்ரநாயுடு காரு, சடகோபராமானுஜாசார்யர், N. R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், R. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், R. நரஸிம்மய்யங்கார், ஸபையின் கார்யதர்சி, இன்னும் மதுரையிலுள்ள அநேக பெரிய மனுஷ்யர்கள் முதலிய எல்லோரும் அக்ராஸனாதிபதியை எதிர்கொண்டு அழைக்க ஸ்ரீகூடலழகர் ஸந்நிதியின் ஸ்தலாங்கங்களுடனும், யானை முதலிய பிருதுகளுடனும், ஸ்கௌட் பார்டி வாலண்டியர்களுடைய ஸமூஹத்துடனும் காத்திருந்து ரயில் வந்து ஸ்டேஷனில் நின்றதும் ஸத்காரஸபையோர் அக்ராஸனருக்கு நல்வரவு கூறி மாலையிட்டு எல்லாப் பிருதுகளுடனும் பாண்டு முதலிய வாத்யங்களுடன் அவரை மோட்டாரில் ஏற்றிக்கொண்டு ஊர்வலமாக அவருக்காக ஏற்படுத்தப்பட்ட பங்களாவுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். ஜாகை ஸமீபித்ததும் பூர்ணகும்பங்களுடன் வேதபாராயணகோஷ்டியார் எதிர்கொண்டு வந்து ஸ்வஸ்திவாசனத்துடன் ஜாகைக்கு அழைத்தார்கள். அன்று ஸாயங்காலம் அவரை ஸ்ரீகூடலழகர் ஸந்நிதிக்கு அழைத்துக்கொண்டுபோய் பெருமாள் தாயார் முதலான எல்லா ஸந்நிதிகளிலும் ஸேவை பண்ணிவைத்து யானைமுதலிய பிருதுகளுடனும் பாண்டுமுதலிய மங்கள வாத்யங்களுடனும் மதுரையிலுள்ள ப்ரதான வீதிகள் வழியாக ஊர்வலமாகத் திரும்பி அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

திங்கள்கிழமை காலை 9-மணிக்கு வேதபாராயண ஸ்வாமிகள் பூர்ணகும்பத்துடன் அக்ராஸனாதிபதியைக்கண்டு, அவர்தங்கியிருந்த வஸதியிலிருந்து மஹாஸங்கம் நடைபெறுவதற்காக அலங்கரிக்கப்பட்டிருந்த ஸேதுபதி ஹைஸ்கூலுக்கு அவரை ஸ்வஸ்திவாசனத்துடன் அழைத்துக்கொண்டுபோனார்கள்.



சென்னை, திருப்பாதிரிப்புலியூர், கும்பகோணம், மன்னார்கோயில், தஞ்ஜாவூர், திருச்சி, ஸ்ரீரங்கம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, ஆழ்வார்திருநகரி, ஸ்ரீவைகுண்டம், நாமக்கல், சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, திருவனந்தபுரம் முதலிய இடங்களிலிருந்து அநேகம் ஸ்வாமிகள் எழுந்தருளி இருந்தார்கள். உள்ளூரிலிருந்தும் பக்கத்து அக்ரஹாரங்களிலிருந்தும் ப்ரமுகர்களனைவரும் வந்திருந்தார்கள். ஸ்வாமிகளால் கூடப்பட்ட ஸேதுபதி ஹைஸ்கூலின் விசாலமான ஹாலில் அக்ராஸனாதிபதியை அழைத்துவந்ததும் எல்லோரும் எழுந்து மரியாதைசெய்து அவருடைய ஸ்தானத்துக்கு அவரை எழுந்தருளப்பண்ணினவுடன் எல்லோரும் நின்றுகொண்டே வேதஸூக்தம், ஸம்ஸ்க்ருதச்லோகம், திவ்ய ப்ரபந்தம், ஆசார்ய ஸ்ரீஸூக்தி, இவைகளால் ச்ரவணமதுரமாய்ப் பகவத் ப்ரார்த்தனை செய்தபிறகு எல்லோரும் உட்கார்ந்தார்கள்.

வரவேற்பு ஸபையின் அத்யக்ஷரான ஸ்ரீ. உப. பாஷ்யமய்யங்கார் ஸபைக்கு ஸ்வாகதம் கூறி ஸ்ரீ. உப. கனம் ஜஸ்டிஸ் வ. வே ஸ்ரீநிவாஸ அய்யங்காரை அக்ராஸனம் வஹிக்கும்படி ப்ரேரணை செய்தார். ஸ்ரீ. உப. டி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் அதை ஆமோதிக்க மிகுந்த கரகோஷத்துடன் ஸபையோர் அதை அங்கீகரித்தார்கள். பிறகு அக்ராஸனாதிபதி உபந்யாஸம் செய்து முடித்ததும் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. கபிஸ்தலம் தேசிகாசார்யர் அக்ராஸனாதிபதியின் உபந்யாஸத்தை ச்லாகித்துப் பேசினார்.

பிறகு திருவஹீந்த்ரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்ஹாசார்யா ஸ்வாமி 'மதுரையும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமும்' என்னும் விஷயத்தைப்பற்றி, ஸபையோர்களுக்கு மிகவும் ரஞ்ஜகமாக இருக்கும்படி வாகம்ருதத்தை வர்ஷித்தார். அதன் ஸாரமாவது—ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்திற்குப் பரதத்வம் பரமஹிதம் பரமபுருஷார்த்தம் என்பவைகள் நிதிகள் எனப்படும். இந்நிதிகளை அறிவது ஆசார்ய கடாக்ஷம் என்ற அஞ்ஜனத்தோடு சேர்ந்த ஜ்ஞானக்கண்களாலே. அப்படிப்பட்ட நிதிகளை ச்ரமமில்லாமல் எல்லோரும் அறியும்படி நேர்ந்தது இந்த மதுரை என்னும் திவ்ய க்ஷேத்ரத்தில் நடந்த சரித்ரவிசேஷங்களாலே, அதாவது எம்பெருமானால் நியமிக்கப்பட்ட பெரியாழ்வார் அந்தப்பகவானுடைய அனுப்ரவேசத்தினாலேயே எல்லா வேதாந்த வாக்யங்களையும் நிரூபித்துப் பரதத்வ நிர்த்தாரணம் செய்தார் என்பதாலும், பிறகு பாண்ட்ய மஹாராஜன் யானையின்மேல் பெரியாழ்வாரை எழுந்தருளச்செய்து வீதிவலம் வருகையில் பக்தர்களிடம் மிகுந்த கருணையுடன்கூடின எம்பெருமான் புத்ராதிகளின் மஹோத்ஸவங்களைக் காணவந்த பிதாக்களைப்போலக் கருடாரூடராய் ஸர்வமஹிஷீ பரிஜனங்களுடன் ஆகாசத்தில் தோன்றிநிற்க, அவரை ஸாக்ஷாத்கரித்த பெரியாழ்வார் அவரைக்கொண்டு தன்னை ரக்ஷித்துக்கொள்

ஸத் தேடாமல் அவனுடைய ஜ்ஞான சக்த்யாதிகளை மறந்து அஸ்தானத்தில் பயசங்கை உடையவராய் இப்படிப்பட்ட ஸர்வோத்க்ருஷ்டமானவஸ்து, காலத்தினால் மாறுதலை அடையும் இந்தத் தேசத்தில் வந்து தோன்றி நிற்கிறதே! இதற்கு ஒரு தீங்குமில்லாமல் இருக்கவேண்டுமென்று அருளி ஜனகராஜன் திருமகளைப்போலவும், தண்டகாரண்யவாஸி ருஷிகளைப்போலவும் மங்களாசாஸனம் செய்தருளினர். இதனால் அவனுடைய ஸம்ருத்தியே பரமபுருஷார்த்தம் என்று தெரிவிக்கப்பட்டது. இப்படிப்பட்ட நிதிகளை வருத்தமில்லாமல கண்டெடுத்த இடமாகிய இந்தத் திவ்ய க்ஷேத்ரத்தில் இந்த ஸபைகூடவேண்டியது அவச்யம். அது இவ்வளவுநாள் கழித்து நேர்ந்ததும் ஸ்ரீவைஷ்ணவர்களின் லாபமேயாகும்" என்று உபந்யஸித்தருளினர். இத்துடன் காலை ஸபை கலைந்தது.

மறுபடியும் மாலை 2-45-க்கு ஸபைகூடிற்று. ஸ்ரீ. உப. ராவ்பஹதூர் ராமஸ்வாமி அய்யங்காருடையவும், ஸ்ரீமான் உப்பட்டூர் ஆழ்வார்செட்டிகாருவுடையவும், ஸ்ரீ. உப. வே. வித்யாநிதி ஆர். க்ருஷ்ணமாசாரியர் ஸ்வாமியினுடையவும் வியோகத்தினால் ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்திற்கும், இந்த ஸபைக்கும் ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தைப்பற்றிய தீர்மானத்தை ஸ்ரீ. உப. தி. கோதண்டராம அய்யங்கார், ஸ்ரீமான் ரங்கராமாநுஜதாஸர், வித்வான் ஸ்ரீ. உப. திருநாராயண அய்யங்கார் ஸ்வாமியும் முறையே ப்ரேரணைசெய்ய, அவைகளை ஸ்ரீ. உப. ஆர். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஆமோதிக்க, திவான் பஹதூர் ஸ்ரீமான் ராமபத்ர நாயுடுகாரு, ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் கார்யதர்சி, ஸ்ரீ. உப. என். ஆர். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் முறையே அநுமோதிக்க அக்ராஸனருடைய நியமனப்படி ஸபையோர் அனைவரும் எழுந்து நின்று ஏகமனதாய்ப் பின்வரும் தீர்மானத்தை அங்கீகரித்தார்கள். "சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் உத்பத்தி முதல் அதன் அங்கத்தினராகவும், நெடுங்காலம் அதன் ப்ரதிநிதிகளில் ஒருவராகவும், சுமார் மூன்று வருஷகாலம் ஸபாத்யக்ஷராகவுமிருந்த ராவ்பஹதூர் ஸ்ரீ உப. வே. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி, இந்த ஸபையின் போஷகராக இருந்து ஏராளமான த்ரவ்யஸஹாயம் செய்து இரண்டு வார்ஷிக மஹாஸங்கத்தை நடத்தி வைத்து உபகரித்த ஸ்ரீ ராமாநுஜதாஸரான ஸ்ரீமான் உப்பட்டூர் ஆழ்வார் செட்டிகாரு, இந்த ஸபையின் எக்ஸிக்யூடிவ் போர்டின் மெம்பராக வெகுகாலமிருந்து, இந்த ஸதஸ்ஸை இந்த மதுரையில் நடத்த வேணுமென்று இந்த வருஷாரம்பத்தில் அநேக ஏற்பாடுகள் செய்தும், ஸம்ஸ்க்ருதத்துக்கு வெகுபாடுபட்டு க்ரந்த மூலமாயும் இன்னும் பலபடிகளில் உபகரித்தும் கம்பராமாயணத்தின் ரஸத்தைத் தமிழ் தெரியாதவர்கள் அறியும்பொருட்டு ஸம்ஸ்க்ருதத்தில் எழுதி உபகரித்த ஸ்ரீ. உப. வே. வித்யாநிதி ர. க்ருஷ்ணமாசார்யர்ஸ்வாமி இம்மூவரும் பரமபதமடைந்ததால் இம்மஹா



ஸங்கத்தார் தங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை இதனால் குறிப்பிட்டுத் தங்கள் அநுசோசனங்களை அவர்களுடைய குடும்பத்தார்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறார்கள்' என்று.

பிறகு ஹிந்துமதஸ்தாபன மசோதாவைப்பற்றி பின்வரும் தீர்மானத்தை ஸ்ரீ. உப. டி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் ப்ரேரணை செய்யப் புதுக்கோட்டை வக்கீல் ஸ்ரீ. உப. ஆர். ஸ்ரீநிவாஸாசார்யர் ஆமோதிக்க எல்லோரும் ஏகமனதாய்த் தீர்மானித்தார்கள்.

'சென்னை சட்டைஸபையோரால் சட்டமாகக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்ட ஹிந்துமதஸ்தாபன மசோதாவைக் கனம் பொருந்திய வைஸிராய் ப்ரபு சட்டமாக்க க்ருபைகூர்ந்து அநுமதி கொடுக்கக்கூடாது என்று வைஸிராய் ப்ரபுவை ப்ரார்த்திக்கிறார்கள்' என்று.

பிறகு மஹாமஹோபாத்யாய ஸ்ரீ. உப. கபிஸ்தலம் தேசிகாசார்யர் "சங்கர ராமாநுஜபாஷ்யங்கள்" என்னும் விஷயத்தைப்பற்றி, பகவத்ராமாநுஜபாஷ்யத்திற்கு சங்கரபாஷ்யத்தைவிட ஸ்வாரஸ்யமும், ஸூத்ரம் ச்ருதிகள் இவைகளின் ஆநுகுண்யமும் இருக்கிறதென்று நிரூபிக்க ஆரம்பித்து ஒவ்வொரு அதிகரணங்களையும் நிரூபிக்க ஸாவகாசமில்லாமையினால் ஸ்வப்நத்தைப்பற்றி விசாரிக்கும் ஸந்த்யாதிகரணத்தைப்பற்றி ராமாநுஜபாஷ்யத்தில் ஸூத்ரங்களின் வரிசைக்ரமங்களில ஸ்வாரஸ்யமும் பதங்களின் அமைப்பும் ஆநுகுண்யமும் இருக்கிறதென்றும், சங்கரபாஷ்யத்தில் அவைகள் குறைவாக இருப்பதோடு, 'பராபித்யாநாத்து திரோஹிதம் ததோ ஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ' என்கிற ஸூத்ரமே அவர் பாஷ்யப்படி இந்த அதிகரணத்திற்குப்பொருந்தவில்லையென்றும், சில பதங்களையும் சேர்த்து அர்த்தம் சொல்லவேண்டியிருக்கிறது என்றும், 'ததஃ' என்னும்பதம் கீழ்க்குறித்த அர்த்தத்தைக் குறிக்கிறதென்கிற ஸ்வாரஸ்யத்துக்கும் விரோதம் வருகிறதென்றும், இவைகளைக் கொண்டு ஸ்வாரஸ்ய அஸ்வாரஸ்யங்களை விசதமாக நிரூபித்து சங்கரமதப்படி ஸ்வப்நம் பொய்யென்றும் ஸ்ரீராமாநுஜமதப்படி ஸ்வப்நம் நிஜமென்றும் உபந்யாஸம் செய்தருளினர். பிறகு ராமநாதபுரம் ஸமஸ்தானம் தமிழ் வித்வான் ஸ்ரீ. உப. ராகவய்யங்கார் 'நம்மாழ்வாரிடம் கம்பருடைய ஈடுபாடு' என்னும் விஷயத்தைப்பற்றி, வைஷ்ணவ மதமே ஸர்வோத்க்ருஷ்டமான மதமென்றும், விஷ்ணுவே பரதேவதை என்பதையும் அநேக 'லௌகிக ந்யாயங்களைக்கொண்டு நிரூபித்தும், கம்பருடைய கொள்கையும் இந்த விஷ்ணுவே பரதேவதை என்று அவருடைய பாட்டுகளைக்கொண்டு நிரூபித்தும், இப்படி மேன்மையுள்ள மதத்துக்கு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானது மிகவும் சிறப்பு என்றும், அவரிடம் கம்பர் விசேஷமாக ஈடுபட்டிருக்கும் காரணம் நம்பெருமாளுடைய நியமனம் என்றும், கம்பர் அவரிடம் ஈடுபட்டதைப்

சடகோபர் அந்தாதியிலிருந்து எடுத்துரைத்துக்காட்டியும் உபந்யஸித்தருளினார். இத்துடன் முதல் தினம் ஸபைகலைந்தது.

இரண்டாவது நாள் செவ்வாய்க்கிழமை காலை 8-மணிக்கு மறுபடியும் ஸபை கூடிற்று. முதலில் ஸபையின் அங்கத்தினர்களின் வார்ஷிக ஸங்கம் நடைபெற்றது. ஸபையின்வருஷாந்த அறிக்கை உதவி கார்யதர்சியால் படிக்கப்பட்டு ஸ்ரீ. உப. எம் எஸ்.க்ருஷ்ணமாசார்யரால் அங்கீகரிக்க வேணுமென்று ப்ரேரேபணை செய்யப்பட்டு ஸ்ரீ. உப. வ. பாஷ்யமய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு ஸபையோரால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது. பிறகு அக்ராஸனாதிபதி ஸபையின் முன்னேற்றத்துக்கு அநந்ய ப்ரயோஜனராய் தன் ஸொந்தக்கார்யங்களையும் விட்டு இந்த ஸபைக்கென்றே உழைத்துவரும் நம் கார்யதர்சியாகிய ஸ்ரீ. உப. ஆர். ஸ்ரீநிவாஸராகவ அய்யங்காரின் பரிச்ரமத்தைபற்றிப் பேசி ஸபைக்கு சென்ற இரண்டு வருஷங்களில் வ்ருத்தி செய்யப்பட்டதையும் காட்டி, ஸபைக்கு அதிகமாக மெம்பர்கள் சேரவேண்டுமென்றும் இப்பொழுது இருக்கும் ஒவ்வொரு மெம்பர்களும் நாலு ஐந்து மெம்பர்களைச் சேர்த்துக் கொடுக்கிறது என்கிற ஸங்கல்பத்தைச் செய்து கொண்டால் ஸபை நிரம்பவும் முன்னுக்கு வந்துவிடும் என்று சொல்லி ஸபையில் கூடியிருந்த மெம்பர்களில்லாத ஸ்வாமிகளை மெம்பராகச் சேரும்படி ப்ரார்த்தித்தார். அதன்பேரில் ஸுமார் 17-பேர் மெம்பரானார்கள். பிறகு இந்த வருஷத்திற்கு நிர்வாஹ ஸபைக்கு மெம்பர்கள் மேலே குறிப்பிட்டிருக்கும் ப்ரகாரம் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

### போஷகர்கள்.

(1) ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உப. D. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், டில்லி.
(2) ஸ்ரீ. உப. M. R. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், மேலப்பாளையம்.

### ஸபாத்யக்ஷர்.

கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீ. உப. வ. வே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், B.A., B.L.

### ஸபாத்யக்ஷப்ரதிநிதிகள்.

(1) ஸ்ரீ. உப. S. ராஜகோபாலாசார்யர், மன்னார்குடி.
(2) ஸ்ரீ. உப. T. கோதண்டராம அய்யங்கார், B.A., M.L.
(3) ஸ்ரீ. உப. அம்பில் கோபாலா சார்யர், B. A., M.L. திருச்சிறுப்பள்ளி.
(4) திவான் பஹதூர் ஸ்ரீமான் நம்பெருமாள் செட்டிகாரு, B.A., சேத்துப்பட்டு.
(5) ஸ்ரீ. உப. வ. பாஷ்யமய்யங்கார், B.A., B.L., மதுரை.
(6) திவான் பஹதூர், ஸ்ரீமான் ராமபத்ர நாயுடுகாரு, ஜமீன்தார், தொட்டப்பநாய னூர்.

### கார்யதர்சிகள்.

(1) ஸ்ரீ. உப. S. கோபாலஸாமி அய்யங்கார், B.A., B L., மைலாப்பூர்.
(2) ஸ்ரீ. உப. R. ஸ்ரீநிவாஸ ராகவ அய்யங்கார், M.A., புரசைவாக்கம்.



### உதவிகார்யதர்சி.

ஸ்ரீ. உப. கோமடம் S. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், கோமளேச்வரன் பேட்டை.

### நிர்வாஹ கமிட்டி மெம்பர்கள்.

(1) திருவஹீந்திரபுரம் செட்லூர் வித்வான் பண்டித பூஷணம் பகவத் விஷயம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர், புரசைவாக்கம்.
(2) ராவ் ஸாஹிப் ஸ்ரீ. உப. T. S. ஸ்ரீநிவாஸ ராகவா சார்யர், மஸுலிபட்டணம்
(3) ஸ்ரீ. உப. K. T. பார்த்தஸாரதி அய்யங்கார், வேலூர்.
(4) ,, வி. என். செல்லமய்யங்கார், சேலம்.
(5) ,, டி. எ. சடகோபா சார்யர், திருப்பாபுலியூர்.
(6) ,, B. R. க்ருஷ்ணஸாமி அய்யங்கார், எழும்பூர்.
(7) ,, ரங்கஸாமி ஸரஸ்வதி, திருவல்லிக்கேணி.
(8) ராவ்ஸாஹிப் ஸ்ரீ. உப. தி. ராமாநுஜ அய்யங்கார், திருவல்லிக்கேணி.
(9) ஸ்ரீ. உப. வி. கோபாலாசார்யர், புரசைவாக்கம்.
(10) ஸ்ரீ. உப. D. V. நீலமேகாசார்யர், கீழ்பாக்கம்.
(11) ஸ்ரீ. உப. T. R. ராஜகோபால ஆசார்யர், புரசைவாக்கம்.
(12) ஸ்ரீமான். S. வெங்கடாசலம் பிள்ளை, புரசைவாக்கம்.
(13) ஸ்ரீ. உப. M. S. க்ருஷ்ணமாசார்யர், ஸ்ரீரங்கம்.
(14) ஸ்ரீ. உப. K. ரங்காசார்யர், திருநெல்வேலி.
(15) ,, வீணை ராமஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீரங்கம்.
(16) ,, காண்டூர் ராமாநுஜாசார்யர், சென்னை.
(17) ,, S. யாமுன தாதா சார்யர், ஸ்ரீரங்கம்.
(18) ,, K. V. வெங்கடா சார்யர், நாமக்கல்.
(19) ,, K. ராமய்யங்கார், B.A., B.L , M. L. A., மதுரை.
(20) ,, S. G. ரங்காசார்யர், காஞ்சீபுரம்.
(21) ,, N. D. ஸ்ரீராமாசார்யர், திருப்பாபுலியூர்.
(22) ,, V. R. ஸ்ரீசைல சக்ரவர்த்தி, கோயம்புத்தூர்.
(23) ,, A. ராகவாசார்யர், கும்பகோணம்.
(24) ,, R. ஸ்ரீநிவாஸா சார்யர், B. A. B. L., புதுக்கோட்டை.
(25) ,, N. க்ருஷ்ண அய்யங்கார், திருவஹீந்தபுரம்.

### சட்டமாறுதல்கள்.

நிர்வாஹகமிட்டியில் 25 மெம்பர்களிருக்க வேண்டுமென்றும், நிர்வாஹ கமிட்டியின் அங்கத்தினர்கள் முதல் வகுப்பினர்களாக இருக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்ற நான்கு வருஷங்களாகத் தீபிகையின் பத்ராதிபராக இருந்து இவ்வருஷ ஆரம்பத்தில் ராஜீநாமா கொடுத்த ஸ்ரீ. உப. நடாதூர் ஸ்ரீநிவாஸா சார்

யருக்கு ஸபையோர் தங்களுடைய க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கும்படியாக ஒரு தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீ. உப. ரகுபதி ஆசார்யர் "கர்மங்களின் புண்ய பாபங்களும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமும்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு அதில் ஸ்ரீவைஷ்ணவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றும், அவர்களுடைய கொள்கைகளை விசேஷமாக எடுத்து நிரூபித்தும, கடைசியாக கர்மங்களின் ஸ்வரூபங்களை ஸங்க்ரஹமாகக் காட்டி நிரூபித்தார். அதன் பிறகு ஸ்ரீ. உப. ஸாது ராமாநுஜாசார்யர் சில அஸௌகர்யங்களினால் ஸபைக்கு வரமுடியவில்லையாகையால், அவருக்குப்பதிலாக ஸ்ரீ. உப. காண்டூர் ராமாநுஜாசார்யர் "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் ஸர்வஜனஹிதத்வம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு அதில் த்வைத, அத்வைத, விசிஷ்டாத்வைத மென்ற த்ரிமத பாஷ்யகாரர்களும் விஷ்ணுவே பரதேவதை என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்று அவரவர்கள் க்ரந்தங்களிலிருக்கும் வாக்யங்களை எடுத்துககாட்டியும், இன்னும் வைத்யம், ஜ்யோதிஷம், மந்த்ரசாஸ்த்ரங்களிலும் விஷ்ணுவே பரதேவதை என்று காட்டபட்டிருக்கிறதென்றும், விஷ்ணு பரதேவதை என்று ஒப்புக்கொள்ளாதவர்களும் தங்கள் தங்கள் வர்ணாச்ரம தர்மங்களின் முக்யமான க்ரியைகளில் விஷ்ணு வென்று திருநாமத்தை உடைய மந்த்ரத்தையே சொல்லிச்செய்கிறார்கள் என்றும் எடுத்துரைத்து, இதனால் எல்லாஜனங்களுக்கும் வைஷ்ணவமதம் ஹிதம் என்று உபந்யஸித்தார். அதன்பிறகு ஸ்ரீ. உப. வடபத்ரசாயி அய்யங்கார் 'ஸமாச்ரயணம்' என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, அதில் வேதங்களில திருமந்த்ரம் த்வயம் இவைகளின் அர்த்தங்கள் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன என்று ச்ருதிவாக்யங்களை எடுத்துக்காட்டி உபந்யஸித்து பஞ்ச ஸம்ஸ்காரம் இன்னதென்பதை நிரூபித்தருளினர். இத்துடன் காலை ஸபை கலைந்தது.

மத்யாஹ்னம் 2-மணிக்கு மறுபடியும் ஸபைகூடிற்று. ஸபை அதன் பத்திரிகையாகிய வேதாந்ததீபிகை இவற்றின் அபிவ்ருத்தியைப்பற்றிய பின்வரும் தீர்மானத்தை ஸ்ரீ. உ. வி. எஸ். தேசிகாசார்யர் ப்ரேரேபிக்க, ஸ்ரீமான் கோபாலக்ருஷ்ணகோன் ஆமோதிக்க, ஸபையோர் அங்கீகரித்தார்கள். "ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் மதாபிமானத்தையும் ஸமூஹபலத்தையும், ஸஹோதரபாவத்தையும் வ்ருத்திசெய்து ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ரக்ஷித்துப் பரவச் செய்யவேண்டிய ப்ரயத்னங்களைப் பலமுறையாகச் செய்யவேண்டுமென்றும், இந்தச் சென்னை ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையையும் அதன் பத்திரிகையாகிய வேதாந்ததீபிகையையும் பலப்படுத்தி அப்பத்ரிகை நமது நாட்டில் நமது ஸித்தாந்தத்தைப் பரவச்செய்ய ப்ரதான ஸாதனமாக இருக்கும்படி அதை ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லோரும் ஆதரித்து வ்ருத்தி செய்ய வேண்டியது அவச்யம் என்றும் சென்ற வருஷத்தில் மஹாஸபைகத்தில் தீர்மானித்ததை இந்த மஹாஸங்கம் மறுபடியும் வற்புறுத்துகிறது" என்று.

பிறகு முதல் நாள் ஸ்ரீ. உப. ராகவய்யங்கார் தம்முடைய உபந்யாஸத்தை பூர்த்திசெய்யவில்லை யாகையால் அதைக் கேழ்க்கவேண்டு மென்று அக்ராஸனாதிபதியும் மற்றவர்களும் அபிப்ராயப் பட்டபடியால், அந்த ஸ்வாமி மறு



படியும் முன் உபந்யாஸத்தின் தொடர்ச்சியைப் பூர்த்திசெய்தார். பிறகு குடைவாசல் வித்வான் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்யர் 'ஜீவாத்மா தேஹமாயும் பரமாத்மா அந்தர்யாமியாகவும் இருக்கும் தத்வம், அதன் ப்ரயோஜனங்களும்" என்னும் விஷயத்தை ஸகலரும் அறியுமாறு மிகவும் ஸ்பஷ்டமாக எளிதான நடையில் சரீரத்தின் லக்ஷணங்களையும், அதில் தார்க்கிகர்கள் சொன்ன லக்ஷணங்கள் ஸரியல்ல வென்றும் ஸ்ரீபாஷ்யகாரர் நிரூபித்த லக்ஷணமே ஸரி என்றும், அப்படி நமது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் சரீரமாகவும் அந்தர்யாமியாகவு மிருப்பதினாலே ஒவ்வொரு வஸ்துவின் ஸ்வரூபம் நிற்கிறதென்றும், இப்படி பகவான் செய்திருக்கும் உபகாரத்தை அறிவதினால் அவரிடம் விசேஷ பக்தியும் அவரை ஆச்ரயிக்க வேண்டு மென்கிற எண்ணமும் உண்டாகிறது என்றும், அதன் ப்ரயோஜனத்தையும் நிரூபித்து, ஸபா ரஞ்ஜகமாக உபந்யஸித்தருளினர். பிறகு திருப்பாப்புலியூர் ஹைகோர்ட்டு வக்கீல் ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், "ஸ்ரீவைஷ்ணவர்களின் ஐகமத்ய ஆவச்யகதை" என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு அழகான வ்யாஸத்தைப்படித்தார். அதன்பிறகு ஸ்ரீரங்கம் வித்வான் ஸ்ரீ. உப. தேசிக வரதாசார்யர் "உபயவேதாந்த ஐககண்ட்யம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு திருவாய்மொழியின் முதல் பாசுரத்தில் ஸ்ரீபாஷ்யத்தின் முதல் ச்லோகத்தின் அர்த்தம் பதங்களின் க்ரமம் இதுகள் அடங்கி இருக்கிறது என்று நிரூபித்து சாரீரக சாஸ்த்ரார்த்தம் முதல் இரண்டு திருவாய்மொழிகளில் ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டி உபந்யஸித்தருளினர். இத்துடன் இரண்டாவது தினம் ஸபை கலைந்தது.

மூன்றாவது தினமாகிய புதன்கிழமை காலையில் ஸபைகூடிற்று. ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி யிடமிருந்து ஸபையின் அபிவ்ருத்தியை மங்களாசாஸனம் செய்த தந்தி (Letter read to-day; Pray unto God all blessings, Success attend Sabha through Aranganagarappan's grace. Sri Karyam) காரியதரிசியால் படிக்கப்பட்டது. ஸபை ஆனதும் கிடைத்த ஸ்ரீமுகமும் இங்கு குறிப்பிடப் படுகிறது—"இப்பவும் ஸ்ரீவைஷ்ணவ மஹாஸபா விஷயமான பத்ரிகை இன்று வந்து கிட்டிற்று. இந்த ப்ரதேசத்திற்குப் ப்ரதானமாய்ப் பெரியாழ்வார் பரத்வ நிர்ணயம் பண்ணியருளின திவ்யதேசமான திருக்கூடல் மதுரையிலே இவ்வருஷத்திய மஹாஸபை நடக்கிறதைக் கேட்டு ரொம்பவும் ஸந்தோஷிக்கிறோம். எம்பெருமானார் தர்சனத்தின் அபிவ்ருத்திக்குக் காரணமான இந்த மஹாஸபை மேன்மேலும் செழித்தோங்கி வளரவேணுமாய் நம் அரங்கநகரப்பன் ஸந்நிதியில் ஸதா ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம். ஸபாகார்யத்துக்கு உபயோகப்படவேணுமாய் யதோசிதம் இவ்விடம் அரங்கநகரப்பன் ஸந்நிதியிலிருந்து அனுப்புவித்திருக்கிறோம்."

ரக்தாக்ஷி நா ஸம்... ழிமீ [illegible]
எல்லில ஜனங்களி சரு [illegible] }

ஸ்ரீ ராமாநுஜன்.

பிறகு ஸபையின் கார்யதர்சி ஸ்ரீ உப. ர. ஸ்ரீநிவாஸராகவய்யங்கார் தீபிகையின் பத்ராதிபராக இருக்கும்படி ஒரு தீர்மானத்தை ஸ்ரீ உப. அன்பில் ஏ. வி. கோபாலாசார்யர் ப்ரேரேபிக்க, ஸ்ரீ உப. வ. ஸப்ஜட்ஜ் பாஷ்யமய்யங்கார் ஆமோதிக்க ஏகமனதாய் எல்லோரும் அங்கீகரித்தார்கள்.

பிறகு காரப்பங்காடு ஸ்ரீ உப. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமி "ஆழ்வார்களும் ஆர்ச்சாவதாரமும்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, அர்ச்சாவதார எம்பெருமான்களுக்கு ப்ரமாணம் த்ராவிட வேதமாகிய திவ்யப்ரபந்தம் என்றும், அதை ஸாக்ஷாத்கரித்த ஆழ்வார்களே அதற்கு ப்ரமாதாக்களென்றும், அப்படிப்பட்ட அர்ச்சாவதார எம்பெருமான் பக்கல் பக்தி பண்ணும் ப்ரகாரத்தைப் பக்திரஸமாகவும், ச்ருங்கார ரஸமாகவும், விப்ரலம்ப ச்ருங்காரமாகவும், இப்படிப் பலவிதமாக ஆழ்வார்கள் நிரூபித்தருளினார்கள் என்றும், ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு உபாயமும் உபேயமும் அர்ச்சாவதார திவ்யமங்கள விக்ரஹங்களோடு கூடின எம்பெருமானே என்று வெகு அழகாய் உபந்யஸித்தருளினார். பிறகு தில்லையம்பூர் ஸ்ரீ உப. சக்ரவர்த்தி ஆசார்யர் 'ஸாத்விகத்யாகம்' என்னும் விஷயத்தைக் குறித்து, த்யாகமாவது மூன்று விதமாக பகவத்கீதா சாஸ்த்ரத்தில் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், அவைகளின் பிரிவுகளையும் இது ஸாத்விகத்யாகம் என்று சொல்லப்பட்டதற்குக் காரணத்தையும், அப்படிச் செய்வதினாலுண்டாகும் ப்ரயோஜனங்களையும் நிரூபித்து உபந்யாஸம் செய்தார். அதன்பிறகு ஒப்பிலியப்பன் ஸந்நிதி வங்கிபுரம் நவநீதம் ஸ்ரீ உப. க்ருஷ்ணமாசார்யர் "ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தம் அநாதி" என்னும் விஷயத்தை, வேதங்கள் அநாதியாகையால் அதில் ஸ்ரீமந்நாராயணனே பரதேவதை, அவனே ஜகத்காரணம், அவனுக்கு மற்ற வஸ்துக்கள் சரீரமாக இருக்கின்றன என்று அந்த சுருதிகளினாலேயே ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதினால், அப்படி அநாதியான ச்ருதி ப்ரதிபாத்யமான விசிஷ்டாத்வைத மதமும் அநாதி என்று உபந்யஸித்தருளினார். அதன்பிறகு ஸ்ரீ. உப. வெங்கடசேஷாசார்யர் 'ஸ்ரீவைஷ்ணவர்களும் இதர தேவதைகளும்' என்னும் விஷயத்தைப்பற்றி உபந்யஸித்தார். பிறகு ராமேச்வரம் தேவஸ்தானம் ஸம்ஸ்க்ருத காலேஜ் ப்ரின்ஸிபால் ப்ருஹ்மஸ்ரீ ஸுந்தர சாஸ்திரிகள் ஸ்ரீவைஷ்ணவர்கள் விஷயமான சில ச்லோகங்களைப் படித்தார். இத்துடன் மூன்றாவது தினம் காலை ஸபை கலைந்தது.

பிறகு மத்யாஹ்னம் 2-30 மணிக்கு ஸபை கூடிற்று. ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ அழகிய சிங்கர்ஸ்வாமி யிடமிருந்து வந்த ஸ்ரீமுகம் ஸபையில் படிக்கப்பட்டது. அதாவது—



ஷிஷ்ய ஷிவாய த்ரீவ்ரா நீஷுதீதா ஸாயஃபூா
நய வணஜந வெதஷெஹாஷணீ வெவஷ்வாதாழ் ।
வாஸிஷடியிகாரத்ர வய௨தாம ஃரய௱ஸீயழ
யதிவதிஃதவ்ரூவெஹ்ரு் நஜ ஸ௵வெரஹூவெஹவ ॥
விஸிஷ்டரவெஹ்த ஸிஜாஜ ஹூாவிநீயஃந௱தூஜா ।
ஸஹா விஜய தாம் த௳வெஷ்ரு் ஸதாம் ஞுவஂஜுதாராகழ ॥

இப்பவும் 14-வது வார்ஷிகமஹாஸங்கத்தின் ஆஹ்வான பத்ரிகை மார்கழிமீ 14உ சேர்ந்து ரொம்பவும் ஸந்தோஷிக்கலானோம். ஷ ஸபையானது உத்தரோத்தரம் அபிவ்ருத்தியடையும்படி ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம்.

இந்தப்படி அநுக்ரஹித்தனுப்பிய மங்களாசாஸன ஸ்ரீமுகம்.

ரக்தாக்ஷிஸு
மார்கழிமீ 15உ } ஸ்ரீஶ்ரஂகொவஜ்ரீஃ.

பிறகு "பாஞ்சராத்ர ப்ராமாண்யம்" என்னும் விஷயத்தைப்பற்றி இஞ்ஜிமேடு ஸ்ரீ. உப. ரெங்கநாதாசார்யர் ஸ்வாமி உபந்யஸித்தார். பாஞ்சராத்ர சாஸ்த்ரம், ஸர்வஜ்ஞன் என்று உபநிஷத்துக்களில் ப்ரஸித்தனான பகவானால் அருளிச் செய்யப்பட்ட சாஸ்த்ரமாகையால் அந்த உபநிஷத்துக்கள் ப்ரமாணமாகில் அப்படிப்பட்டவனால் சொல்லப்பட்ட சாஸ்த்ரத்துக்குத் தோஷம் சொல்ல முடியாதாகையினாலும், அதாவது சொல்லத்தெரியாதவன் என்றாவது அவன் தெரிந்தவனாக இருந்தபோதிலும் நம்மை மோசம் செய்யச்சொன்னான் என்றாவது சொல்லி, அந்த சாஸ்த்ரம் அப்ரமாணம் என்பது வேதங்களை ப்ரமாணமாகக்கொண்ட வைதிகர்களால் சொல்லமுடியாது என்றும், சாரீரக ஸூத்ரங்களை எழுதின ஸ்ரீபாதராயணரே ஸ்ரீமந் மஹாபாரதத்தில் இது மஹாப்ரமாணங்களுக்குள் சிறந்தது என்றும் சொல்லியிருப்பதை விசதமாக நிரூபித்தருளினார். பிறகு, திருச்சினாப்பள்ளி வக்கீல் ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர் "தசாவதார ரஹஸ்யம்" என்னும் விஷயத்தை எடுத்துக்கொண்டு, தசாவதார ஸ்தோத்ரங்களின் ச்லோகங்களில் ஒவ்வொரு பதத்துக்கும் ப்ரயோஜனத்தை விசதமாக நிரூபித்துக்கொண்டு, இப்படி எல்லா அவதாரங்களுக்கும் ப்ரயோஜனம், எம்பெருமான் தான் அந்தர்யாமியாகவும் மற்றவஸ்துக்கள் தனக்குச் சரீரமாகவும் இருக்கும் விஷயத்தைத்தெரிவிப்பதே என்று உபந்யஸித்தார்.

பிறகு ஸபையில் உபந்யாஸம் செய்த ஸ்வாமிகளையும் அக்ராஸனாதிபதி கார்யதர்சி முதலானவர்களையும் சேர்த்து ஒரு புகைப்படம் பிடிக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீ. உப. வே. கே. ராம அய்யங்கார் வரவேற்பு ஸபையாரின்சார்பாகத் தங்களால் செய்யப்படும் ஸம்மானம் மிகவும் ஸ்வல்பம் என்றும், அதை வித்வான்கள் மிகவும க்ருபையுடன் அங்கீகரிக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். பிறகு ஸங்காரஸபைக்கு விசேஷ உதவிபுரிந்த கனதனவான்களின் திருநாமங்கள் படிக்கப்பட்டன. அதன் பிறகு ஸம்பாவனைகள் நடந்தன. அதன் பிறகு அக்ராஸனர் முடிவுரை கூறினர். பிறகு மதுரையில் வக்கீலாயும் ஸம்ஸ்க்ருதத்தில் அத்விதீய ஜ்ஞானமும் உள்ள ஆசுகவியான ப்ருஹ்மஸ்ரீ வி. எஸ். ராமஸ்வாமிசாஸ்த்ரிகள் அப்போதே கவனம்செய்த கீழ்க்குறிக்கப்பட்ட ச்லோகத்தைச் சொன்னர்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

அதன்பின் ஸபையைப்பற்றி மங்களவாழ்த்துக்களான சில ச்லோகங்கள் ஸ்ரீ. உப. வேங்கட சேஷாசார்யராலும் பெரும்பேர் ஸ்வாமியாலும் படிக்கப்பட்டன. அநந்தரம் தமிழ்ச்சங்கக் கலாசாலை உபாத்யாயர் ப்ருஹ்மஸ்ரீ க. ஹரிஹர அய்யரும், செந்தமிழ் உதவி பத்ராதிபராகிய ஸ்ரீ. உப. ராமாநுஜ அய்யங்காரும் தங்களால் இயற்றப்பட்ட மங்கள வாழ்த்துக்களைப் பாடினார்கள்.

பிறகு கார்யதர்சி, இவ்வருஷம் ஸ்ரீஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸம்மானம்பரமபதஸோபானத்துக்கு விஸ்தாரமான வ்யாக்யானத்தை அநுக்ரஹித்திருக்கும் பண்டிதபூஷணம் பகவத்விஷயம் வித்வான் ஸ்ரீ உப. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் ஸ்வாமிக்குக் கொடுப்பதாக தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஸதஸ்ஸில் தெரிவித்தார்.

பிறகு ஸ்ரீ. உப. டி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் இந்த ஸபை இவ்வளவு பரிஷ்காரமாக நடைபெறுவதற்கு உதவிபுரிந்த மதுராவாஸிகளான த்ரிமதஸ்தர்களுக்கும் எல்லா வர்ணத்தார்களுக்கும் ஸத்காரஸபையோருடைய நன்றியறிவைத் தெரியப்படுத்தினர். ஸங்கத்தின் கார்யங்களைச் சரிவரப்பார்த்துச் சிறப்பாக நடத்தி அசலூரிலிருந்து வந்தருளின ஸ்வாமிகளை ஆதரித்துவந்த வாலண்டியர்களுக்கு ஆசீர்வாதரூபமான மங்களத்தைத்தெரிவித்தார். இப்படி பதினொன்காவது வார்ஷிகமஹாஸங்கம் நடைபெற்றது.



இதுவரை நடைபெற்ற ஸங்கங்களில் இந்த ஸங்கத்திலே தான் மிகவும் அதிகமான கூட்டம் காணப்பட்டது. மூன்றுநாளும் கொஞ்சமேனும் குறைவேயில்லை. இது நம் ஸம்ப்ரதாயத்தில் நம்மவர்களுக்கு ஆஸ்திக்யம் அதிகமாக இருக்கிறது என்பதை காட்டுகிறது. முதல் இரண்டுநாள் இரவுகளில் 8½-மணி முதல் 10½-மணி வரையில் ஸ்ரீரங்கம் வைணிக வித்வான் ஸ்ரீ. உப. ராமஸ்வாமி அய்யங்காருடைய வீணாகான ரஸத்தை எல்லோரும் அநுபவித்தார்கள். இந்த வித்வானுக்கு மற்ற வித்வான்களுடன் ஸம்பாவனை செய்தது மல்லாமல், அக்ராஸனாதிபதி, இவருடைய வைதுஷ்யத்தை மெச்சி ஸபையின் பெயரால் ஒரு தங்கப் பதக்கம் (medal) கொடுத்து இவருக்கு "ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் வைணிக வித்வான்" என்ற பட்டமும் அளித்தார். அநேக லௌகிக ப்ரமுகர்களும் வைதிகாக்ரேஸரர்களும், வித்வான்களும் ஸபையை அலங்கரித்தார்கள். இப்படி மேல் மேலும் இந்த ஸபை வ்ருத்தியை அடையவேண்டுமென்று எல்லாம்வல்ல ஸர்வேச்வரன் ஸங்கல்ப்பிக்கும்படி ஸவிநயம் ப்ரார்த்திக்கப்படுகிறது.

### மதுரைச் செந்தமிழ் உதவிப் பத்திராதிபர் ராமாநுஜ அய்யங்கார் பாடிய

### மங்கள வாழ்த்து.

வெண்பா.

ஓரான் வழிபாக வந்த வுபதேசம்
பாரோ ரெளிதிற் பயின்றறியச்—சீராருஞ்
சென்னை நகர்விளங்கும் ஸ்ரீ வைஷ்ணவசங்கம்
மன்னுக பல்லாண்டு வளர்ந்து.

இச்சங்க மீரேழாண் டெய்துதிரு நாளுலகம்
மெச்சுசபா நாயகமாய் வீற்றிருக்கும்—கைச்சங்க
மாழியுடை யாற்கன்ப னும்ஸ்ரீநிவாஸமுகில்
வாழிபல வூழி மகிழ்ந்து.

வாழியஇச் சங்க விழாநடத்து மாண்புடையார்
வாழி தமிழ்க்கூடல் மாநகரம்—வாழியரோ
இந்நா ளிவணெம் மியதத் திருளகற்றும்
செந்நாப் புலவர் திறம்.

## மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை உதவி உபாத்தியாயர்
(பண்டித, சு. ஹரிஹரையர் பாடிய)

# மங்கள வாழ்த்து.

உலகளந்தருளியதிருவடித்தொழும்பே
கலமெனநார்க்குநன்கனமுணர்த்திய
தனிமுதற்பார்த்தசாரதிசந்நிதி
தன்னகத்துடையதகைசால்சென்னை
நன்னகரமைந்துநலங்கிளர்ந்தோங்கும்
ஸ்ரீவைஷ்ணவசித்தாந்தசங்கத்தின்
ஈரேழாண்டினின்புறுநல்விழா
வண்டமிழ்தவழ்ந்தவைகையுங்கிருத
மாலைநன்னதியும்மாலையாயிலங்க [தம்
நவமைந்திம்மையோற்பொருள்பயப்ப
பாமலர்மாலையிற்பரிவுமிக்குடையதும்
பூமலர்மாலைபோன்மெனக்கோதை [னம்
சூடிக்கொடுத்ததொடையலாண்டொருதி
நாடித்தரித்துநாமெலாம்வழிபடச்
சுந்தரத்தோளன்வந்தருள்புரிவதும்
அடியவர்க்கருள்பெரியாழ்வாரன்பொடும்
நெடுமால்பரத்துவநிர்ணயஞ்செய்து [கு
மல்லாண்டதிண்டோன்மணிவண்ணனுக்
பல்லாண்டியம்பியபான்மைநன்கமைந்த
[தும்

கூடலழகர்கோவில்கொண்டருளும்
நீடியபெருமைநிலைத்ததுமான
மாடமதுரையுள்மகிழ்வுறநிகழ்வழிச்
சென்னைமாநகரிற்சிறந்தநன்னீதி
மன்னவைக்கதிபன்மாமறைச்செல்வன்
வைணவக்கலையின்வகையுணர்ந்தெவர்க்கும்
வைணவச்சிறப்பினைவழங்கிடும்பெரியோன்
தருமமேசான்றதகுதியினுயர்ந்தோன்
ஸ்ரீநிவாஸனெனுந்திருப்பெயரோன்
உக்கிராசனத்திலமர்ந்தினிதருள
உபயவேதாந்தமொருங்குணர்பெரியோன்
அருமறைப்பொருளையாவருமுணர
இருமொழிமறையுமியைத்தநற்சான்றுத்
தாமுணர்த்தியசீர்சாற்றுதற்கரிதால்
இத்தகைச்சிறப்புற்றிலங்குமிச்சங்கமும்
வித்தகத்தலைவரும்வீபுதரும்பிறரும்
எங்கணுநிறைந்துயிர்க்கிடராமளிக்கும்
செங்கண்மாலருளாற்சிறந்துவாழியவே.

ஸ்ரீ:

# கடிதம்.

## சிலசர்ச்சைகள்.

### பகவத் விஷயம்.

வேதாந்ததீபிகையின் பத்ராதிபருக்கு:—

தத்காலத்தில் குருகுலவாஸம்செய்து சுச்ருஷைசெய்து, ஆசார்யர்களிடம் நம் பூர்வாசார்யர்களுடைய திவ்யஸூக்திகளை ஸிரபரிசயம்செய்து நிஷ்கர்ஷஜ்ஞானம் ஸம்பாதிப்பவர்களில்லாமையாலும், ஆசார்யர்களுடைய அபிப்ராயங்களை ஸுலக்ஷமாய் அறி



ந்துகொள்ள அர்த்தவிமர்சத்தின் பொருட்டு சோத்யங்கள் செய்தால் அதிகப்ரஸங்கமென்றும் குசோத்யங்கள் என்றும் ஆசார்யர்களுடைய திருவுள்ளம் கலங்கும் என்றும் அதிசங்கையாலும் நிஸ்ஸந்தேஹமாய் அத்யயனம் செய்த ஸ்வாமிகள் குறைந்துவிட்டார்கள். இப்படிக்கேற்பட்ட குறைவினால் அடியேன் திருவாய்மொழியின் பெருமையையும் ஆறாயிரப்படியின் அகாதமான காம்பீர்யத்தையும் பூர்ணமாக அறியப்பெற்றிலேன். இவைகளை முழுவதும் உணர யத்னம்செய்ததில் அடியேனுக்கு வெகுகாலம் வ்ருதாவாகச்சென்றுவிட்டது. அப்படிச்செய்ததில் சிலசோத்யங்களையும் சில தாரான்வயங்களையும் இந்த திவ்ய ஸூக்திகளில் ருசியுள்ள சில ரஸிகர்களும் தெளியும்பொருட்டு இங்கு குறிப்பிடுகிறேன்.

முதல் திருவாய்மொழி ஐந்தாம் பத்தாகிய "வளவேழுலகினு"டைய ஆறாயிரப்படியில்கண்ட அர்த்தங்களில் அடியேனுக்கு தாரான்வயமாக இருந்ததை இங்கு குறிப்பிடுகிறேன். ஆழ்வார் நான்காவது தசகமாகிய "அஞ்சிறையமடைநாராய்" என்னும் பாசுரங்களில் பகவானுடைய அபராதஸஹத்வமாகிற குணத்தைக்கொண்டு தம்மை க்ஷமித்து பிறகு அடிமை கொண்டருளவேண்டுமென்று அபேக்ஷித்தார். இந்த ஐந்தாவது தசகத்தில் எம்பெருமான் ஸர்வவித ஸம்ச்லேஷம் செய்கைக்கு ஈடாகும்படி எழுந்தருளினார் என்று ஆறாயிரப்படியின் அவதாரிகை. இதற்கு ஆழ்வார் பாசுரத்தில் கமகம் என்ன? முதல்பாசுரத்தில் தான் பகவத்குணங்களைச்சொல்லவும் உள்ளபடி நினைத்து அநுஸந்திக்கவும் அனர்ஹனென்றும், ஆகையால் அவருடைய திருவடிகளில் அடிமைசெய்வது அவருக்குப் பொருந்தாதென்றும், அது தனக்குப் பாபமென்றும் ஆழ்வார் அருளிச்செய்கிறார். பகவான் எழுந்தருளியது எங்கு த்யோதிதம்?

இரண்டாவது பாசுரத்திலும் நித்யஸூரிகள் பக்திசெய்தாலும் பெருமாளுடைய பெருமை மழுங்குமென்றும், தாம் அடிமைசெய்வது அத்யந்தம் அயுக்தம் என்றும் அல்லவோ அருளிச்செய்கிறார். இப்பாசுரத்தின் ஆறாயிரப்படியில் ஆழ்வார் பெருமாளை விட்டு அகலுகிறார் என்ற முடிவு எங்கே கிடைத்தபடி?

மூன்றாவது பாசுரத்தில் ஆழ்வார் பகவானுடைய மாத்ருவாத்ஸல்யத்தையும் ஸௌசீல்யத்தையும் ப்ரஸ்தாபித்தருளி ஸ்தோத்ரம் செய்கிறதாக அடியேன் சிற்றறிவுக்கு புலப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆறாயிரப்படியில் ஆழ்வார் தம்முடைய நிகர்ஷாநுஸந்தானத்தாலே எம்பெருமானைவிட்டு அகலுகிறார் என்றும் அவரை பெருமாள் ஸமாதானம் பண்ணுகிறார் என்றும் வ்யாக்யாதமாகி இருக்கிறது. இதற்கு நிர்வாஹமெப்படி?

நான்காவது பாசுரத்தில் 'வானோர் பெருமான், மாமாயன், வைகுந்தன், எம்பெருமானே' என்றுமாத்ரமே கண்டுள்ளது. ஆழ்வார் பெருமாளுக்கு ஸர்வசேஷவ்ருத்தியைப்பண்ணுவேன் என்று தன் திருவுள்ளத்தை த்ருடீகரித்துக்கொண்டார் என்று ஆறாயிரப்படி. இதற்குக் கமகம் எங்கே? வேறு சில உக்திகளால் ஆறாயிரப்படியில் இந்த அர்த்தம் கிடைத்ததென்றால் அது எவ்விடமிருக்கிறது?

ஐந்தாவது பாசுரத்தில் 'தேனேமலரும் திருப்பாதம் சேருமாறு நீ அருளாய்' என்றல்லவோ ப்ரார்த்தனை. ஆறாயிரப்படியில் எம்பெருமான்தானே சென்று ஆழ்வாருடன் ஸம்ச்லேஷித்தால் ஆழ்வார் அகலுவார் என்றபயத்தாலே நின்றுவிட்டார் என்றும், ஸம்ச்லேஷத்தில் பதட்டத்தையும் அவஸரத்தையும் காட்டினால் முன்போலவே தமக்கு ஸம்ச்லேஷம்கூடி வராதென்றும் ஏறவாங்கி இருந்தார் என்றும் காணப்படுகிறது. இந்த உரைக்கு நிர்வாஹம் எப்படி?

ஆறாவது பாசுரத்தில் திரும்பவும் 'அடியேன் நைவேனே' என்று ஆழ்வார்முடிக்கிறார். "வினையேன் வினைதீரும் மருந்தாய்" என்று சொல்லிய இடத்தில் அகஹர்தானுஸந்தானத்தை 'வினை' என்கிற பதத்திற்கு பொருள் என்றுகூறி இருக்கிறார். இதை முன்பு ஸித்தமாய் முதல்பாட்டிலேயே 'மதிநலம் அருளப்பெற்றவன்' என்று கூறி இருக்கும் ஆழ்வார் அத்தையேன் (அந்த ஔதார்யத்தையே) நினைத்துச் சொல்லுவதாக ஏன் பொருள் கொள்ளக்கூடாது?

ஏழாவது பாசுரத்தில் தான் கைவல்யார்த்திகைகளைப்போல இதர ப்ரயோஜனங்களை யாசித்து பெருமானை விட்டகலாமல் அவனை அணுக என்ன அஜ்ஞனோ என்று தம்மை நிந்தித்துக் கொள்கிறார் என்று ஆறாயிரப்படி. இதிலும் மிக்க அயர்வு உண்டோ என்றல்லவோ பாசுரம்.

எட்டாவது பாசுரத்திலும் பெருமாள் எழுந்தருளினதாயும் ஸம்ச்லேஷாபேக்ஷிதராய் ஏறவாங்கி யிருந்ததாயும் அதாவது த்ருடமாக தூரமாக நின்று எழுந்தருளினதாயும் ஸ்பஷ்டமாகக் காணவில்லையே.

ஒன்பதாவது பாசுரத்தில் 'மகாமூர்த்தியைச்சார்ந்து' என்றருளிச்செய்திருக்கிறார். இதனால் மானஸானுபவ மில்லாமல் ஒருவாறுகூட பாஹ்ய ஸம்ச்லேஷமிருந்ததாக ஆறாயிரப்படி ப்ரகாரம் எப்படி கண்டபடி?

பத்தாவது பாசுரத்தில் தம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை அருளிச்செய்கிறார் என்று சாதாரணமாயுள்ளவர்களுக்குப் புலப்படுமே தவிர எம்பெருமானுடைய ஸர்வசக்தித்வம், ஸர்வஜ்ஞத்வம், பரமகாருணிகத்வம், ஆச்ரித வாத்ஸல்யம், என்பவைகளை தன் உபகார நிமித்தமாகவே பகவான் உடைத்தாயிருந்தானென்று ஆறாயிரப்படியில் காண்பதை எப்படி ஸமர்த்திக்கிறது?

நிகமனத்தில் 'இப்பத்தும் வல்லார்கில்லை பரிவதே' என்றல்லவோ காண்கிறது. ஆழ்வாருக்கு ஸம்ச்லேஷம் கிட்டியதற்கு கமகம் எங்கே?

இப்படி அடியேனுக்கு ஒருகாலத்தில் உண்டான சங்கைகள் அடியேனைப்போல் த்ருடஜ்ஞான மில்லாத சிலருக்கும் ஸம்பாவித மாகையால் இச்சோத்யங்களுக்கு அடுத்த ஸஞ்சிகையில் அபிஜ்ஞர்கள் விடைகள் உரைக்கும்படி விநய பூர்வகமாக ப்ரார்த்திக்கிறேன். பெரியோர்கள் க்ருபைசெய்து அவர்களுடைய திருவுள்ளத்தை தீபிகை மூலமாய் தெரிவித்து எம் போலியர்களை க்ருதார்த்தர்களாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். திருக்குருகைபிரான் பிள்ளான் ஆழ்வார் திவ்ய ஸூக்திகளின் உள்



பொருளை யதாவஸ்திதம் அறிந்து உணர்ந்தவர் என்பது எல்லா வித்வான்களுக்கும் தெரிந்ததே. என்போல் அறிவில் குறைந்தவர்களுக்கும் பூர்ணரஸானுபவம் கிடைக்க வேணுமென்றே இந்த கேள்விகளை கேட்டபடி.

K. ராஜகோபாலாசார்யன்.

குறிப்பு:— இதில் முதலில் கூறியிருக்கிறபடி க்ரந்த சதுஷ்டயங்களையும் ஆமூலாக்ரம் ஆசார்ய ஸந்நிதியில் காலக்ஷேபம்செய்து க்ரஹித்த ஆசார்யர்கள் தற்காலத்தில் அகப்படுவது மிகவும் துர்லபமே. அதிலும் இங்கு ப்ரஸ்தாபிக்கப்படும் ஸ்ரீஸூக்திகேவலம் ரஸானுபவ க்ரந்தமாகையினால் இதை முழுவதும் அனுபவித்தவர்கள் அகப்படுவது இன்னும் துர்லபமே. ஆயினும் அப்படிப்பட்ட மஹான்கள் இங்கும் அங்கும் சிலர் இருக்கிறார்கள் என்பதை மாத்திரம் ஒருவரும் மறுக்கமுடியாது. இங்கு செய்யப்பட்டிருக்கும் சோத்யங்கள் எல்லாவற்றிற்கும் ஸமாதானம் சிலபாசுரங்களிலேயே சில பதங்களில் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. அவற்றை அறியவேண்டுமாகில் அப்படிப்பட்ட ஆசார்யனைத் தேடிப்பிடித்து அவர்களுடைய அனுக்ரகத்தைப்பெற்று அறியவேண்டும். [கோ. ஸ்ரீ—உ. கா.]

## கடிதம்.

வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

பாஞ்சராத்ர ஆகமப்ரகாரம் ஆராதனம் நடந்துவரும் சில பகவத்ஸந்நிதிகளில் தீக்ஷைசெய்துகொள்ளாமல் அர்ச்சகர்கள் ஆராதனங்களும் உத்ஸவங்களும் நடத்தி வருகிறார்களே அது உசிதமா? அனுசிதமா? ஸ்ரீபாஞ்சராத்ர ரக்ஷை ஆகமப்ராமாண்யாதி க்ரந்தங்களில் தீக்ஷை அவச்யம் என்று விதித்திருப்பது எந்த தீக்ஷை? விசேஷ தீக்ஷையா? அல்லது ஸாமான்யம் என்று சொல்லப்பட்ட ஸமாச்ரயணம் மாத்திரமா? பின் சொல்லப்பட்டதானால் அது வைஷ்ணவ ஸாமான்யமாகையால் தீக்ஷைகொண்டு தான் ஆராதனம் முதலியது செய்யவேணும் என்று விதித்திருப்பது எப்படி ஸங்கதமாகும்? விசேஷ தீக்ஷையென்றால் அதில்லாமல் ஆராதனம் நடந்துவரும் ஸந்நிதிகளில் தீர்த்த ப்ரஸாதபரிக்ரஹம் செய்வது ந்யாயமாகுமா? இந்தக் கேள்விகளுக்கு ப்ரமாணபூர்வகமாக ஸமாதானம் வேதாந்ததீபிகை த்வாரா எந்த ஸ்வாமிகளாவது க்ருபைசெய்து அனுக்ரஹித்தால் அடியேனுக்கும் இன்னும் அநேகர்களுக்கும் மிகவும் உபகாரமாக இருக்கும்.

வடுவூர் வேங்கடசேஷாசார்யர்.

# புஸ்தக விமர்சம்.

ஸ்ரீபாஷ்யம் (ச்ருதப்ரகாசிகை ஸஹிதம்)—திருச்சிறுப்பள்ளி ஸெயிண்டு ஜோஸப் காலேஜில் ஸம்ஸ்க்ருத பண்டிதர் ஸ்ரீ. உப. நட்டை ஸ்ரீநிவாஸாசார்யர் தமிழ்மொழி பெயர்ப்புடன்:—

நாஸ்திக மதஸ்தர்களாலும் அத்வைதிகளாலும் இந்த பாரதவருஷமானது ஆக்ரமிக்கப்பட்டு நம்முடைய மதம் சீர்குலைந்து தடுமாறும் காலத்தில் ஸர்வமதஸ்தர்களை

யும் ஜயித்து நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நம் நாட்டில் நிலைநிறுத்தின நம்பூர்வாசார்யர்கள் செய்த உபகாரத்தை எப்பொழுதும் க்ருதஜ்ஞதையுடன் கொண்டாடவேண்டுமென்று அவர்களுடைய விக்ரஹங்களை ஸந்நிதிகளில் எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டைசெய்து ஆராதித்து வருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தத்காலத்திலிருக்கும் ஜனங்கள் ஆசார்யவிக்ரஹங்களை தம் தகப்பனார்கள் ஸேவிப்பதால் தாங்கள் ஸேவிக்கிறோம் என்கிற எண்ணத்தினாலே ஸேவிக்கிறார்களே தவிர அவர்கள் செய்திருக்கும் உபகாரத்தை எண்ணி அதனால் உண்டான ப்ரீதியால் ஸேவிக்கிறதில்லை. ஸந்நிதிகளில் திருநக்ஷத்ரங்கள்தோறும் அவர்களுடைய உபகாரத்தை ஸ்தோத்ரரூபமாக அத்யாபியநுஸந்தித்தும் அவைபெல்லாம் ஸம்ஸ்க்ருதபாஷையிலிருப்பதால் அவைகளின் அர்த்தம் தெரியாததால் ஸாதாரண ஜனங்கள் ஏதோ மந்த்ரம் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறார்கள். பூர்வாசார்யர்களிடம் பக்தி, அவர்கள் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளை நன்றாகத் தெரிந்துகொண்டால்தான் உண்டாகும். ஆகையால்தான் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ' நிவிஷ்டம் யதிஸார்வபௌமவசஸாம் ஆவ்ருத்திபிர்யௌவநம்' 'யதிப்ரவர பாரதீ ரஸபரேண நீதம் வய:' (ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்தியின் ரஸாநுபவத்தால் தன்னுடைய யௌவனம் முழுவதும் கழிக்கப்பட்டது, ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகளின் ரஸாநுபவத்தால் தன் ஆயுள் முழுவதும் கழிக்கப்பட்டது.) என்று அருளிச்செய்து ஸ்ரீபாஷ்யகாரரிடம் இருக்கும் தம் பஹுமானத்தை ஸ்பஷ்டமாக நிரூபித்தருளினர். நம்தேசத்தில் வெகுகாலமாக ஸம்ஸ்க்ருதபாஷையில் அநாதரவு பிறந்து அதை உபேக்ஷித்து அதிலிருக்கும் ரத்னங்களை இழந்துவருகிறோம். இன்னும் கொஞ்சம் நாள்களில் அந்த பாஷையின் வாஸனையே இல்லாமல் போய்விடுமோ என்று ஸந்தேஹம் உண்டாகிறது. இந்த க்ரந்தங்களை தமிழில் மொழிபெயர்த்தால் அதை வாசித்தாலாவது மூலக்ரந்தங்களின்பெருமையை அறிந்து, அத்தால் ஸ்ரீபாஷ்யகாரருடையபெருமையையும் அவர் ஸம்ப்ரதாயத்துக்குச் செய்திருக்கும் உபகாரத்தையும் தெரிந்து அவரிடம் பக்தி உண்டாகும். இப்படிச்செய்யாவிட்டால் பக்தி ஏற்படுவது கஷ்டம். அப்படி ஏற்பட்டாலும் அது ஸ்வாரஸ்யத்துடன் கூடினதாக ஆகாது. மேலும் இதர மதஸ்தர்களுடைய கொள்கைகளைக் கண்டித்து நம்முடைய மதம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறபடியால் இதர மதங்களின் ஸ்வரூபமும் வ்யக்தமாகத்தெரிந்து கொள்ளலாம். இதற்காக ஸ்ரீபாஷ்யத்தை ச்ருதப்ரகாசிகையுடன் தமிழில் மொழிபெயர்த்து உபகரித்துவரும் ஸ்ரீரங்கத்திலிருக்கும் தமிழ்மொழிபெயர்ப்புச் சங்கத்தாருக்கும் இதற்கு த்ரவ்யத்தாலும் சரீரப்ரயாஸையாலும் உபகரித்துவரும் ஸ்ரீமான் டி. டி. ராமஸ்வாமி நாயுடுகாருவுக்கும் ஸ்ரீ வைஷ்ணவ ஸமூஹத்தினருடைய க்ருதஜ்ஞதை செலுத்தத்தக்கது.

இதில் இதுவரையில் இரண்டு ஸஞ்சிகைகள் வெளிவந்திருக்கின்றன. முதலில் லகுஸித்தாந்தம் முடியவும் இரண்டாவதில் மஹா பூர்வபக்ஷம் முடியவும் தமிழ்படுத்தப்பட்டிருக்கிறது. இதைப்பற்றின மற்ற விஷயங்கள் தீபிகையின் அட்டையில் இரண்டாவது பக்கத்திலிருக்கும் விளம்பரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்,

186748
சென்னை-600 005.